# சம்மாந்துறை பிரதேச சபை

# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜீலை 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏபரல் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 டிசம்பர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சம்மாந்துறை பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சம்மாந்துறை பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 172(2) இற்கு அமைய கணக்காய்வுக் கட்டணத்துக்கான ஒதுக்கம்நிதிசார்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பின்வரும் வருமானத் தலைப்புகளின் இறுதி மீதிகள், வருமானப் பதிவேடு மற்றும் இறுதிக் கணக்கு என்பவற்றுக்கிடையே வேறுபாடு காணப்பட்டது.

| வருவாய்த் தலைப்பு | இறுதிக்கணக்கின் (ரூபா) | வருவாய்ப்பதிவேட்டின் (ரூபா) | வேறுபாடு (ரூபா) |
|---|---|---|---|
| i. சோலை வரி | 5,431,491 | 9,585,536 | 4,154,045 |
| ii. வீட்டு வாடகை | 6,353 | 388 | 5,965 |
| iii. குத்தகை | 13,347,395 | 2,346,394 | 11,001,001 |
| iv. வாடகை | 1,888,576 | 102,063 | 1,786,513 |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்திற்குக் கூடுதலான வருமான மிகை ரூபா 5,868,967 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டு செலவீனத்திற்கு கூடுதலான வருமானமாக ரூபா 6,923,386 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

-------------------------

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,232,958 ஆனது மிக நீண்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) மீளளிக்கப்படக்கூடியதான வைப்புப் பணங்களில் பண்டங்கள், சேவைகள் வரி ரூபா 4,190,623 தீர்வு செய்யப்படாமல் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்றது.

(இ) சபையின் நிலுவையாக உள்ள அரசிறை ரூபா 20,121,120 ஐ அறவீடு செய்வதற்கு சபை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

(ஈ) இறைச்சிக் கடை குத்தகை வைப்புத் தொகை ரூபா 6,728,840 ஆகும். இது சபையின் வருவாய்க் கணக்கிற்கு மாற்றப்படாமல் உள்ளது.

## 2.3 வருவாய் நிருவாகம்

-----------------------------------

### 2.3.1 மதிப்பீட்டு வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் நிலுவை வருவாய்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | தீர்வையும் வரியும் | 1,000 | 3,455 | 5,431 |
| (ii) | வாடகை | 10,600 | 8,425 | 15,385 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,300 | 676 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 2,150 | 273 | 4,635 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 9,919,138 ஆகும்.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகாரக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வகுதி | அங்கீகரிக்கப்பட்டது | உண்மையானது |
|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 01 | - |
| உதவி நிலைத் தரங்கள் | 22 | 20 |
| ஆரம்ப தரத்தினர் | 52 | 52 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 31 |
| மொத்தம் | 75 | 103 |

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்